**ஜுன் – 08**

# TNPSC துளிகள்

- கல்வராயன் மலைப் பகுதியில் வசித்து வரும் பழங்குடியினச் சமூகத்தைச் சேர்ந்த A. இராஜேஸ்வரி என்பவர் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் இடம் பெற்று, அரசு பழங்குடியின உறைவிடப் பள்ளியில் படித்து தற்போது IIT கல்லூரியில் சேர தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் தமிழக மாணவி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- சென்னை மெட்ரோவாட்டர் நிறுவனமானது நகரம் முழுவதும் 50 முக்கிய இடங்களில் குடிநீர் வழங்கீட்டிற்கான ஸ்மார்ட் ATM இயந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் (EAC-PM) புதியத் தலைவராக பொருளாதார நிபுணர் S. மகேந்திர தேவ் நியமிக்கப்பட்டுள்ளார்.
- வால்மார்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான இணையவழி வணிக நிறுவனமான பிளிப் கார்ட், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வங்கி சாரா நிதி நிறுவன (NBFC) உரிமத்தைப் பெற்றுள்ளது என்பதோடு, இந்தியாவில் இதுவே இம்மாதிரியில் முதல் முறை ஆகும்.
- TVS மோட்டார் நிறுவனமானது, சர் ரால்ஃப் ஸ்பெத்துக்கு அடுத்தபடியாக, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதி முதல் பொறுப்பேற்கும் வகையில் சுதர்சன் வேணுவை அதன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமித்துள்ளது.
- புகழ்பெற்றச் சூழலியல் நிபுணர் பேராசிரியர் மாதவ் காட்கிலின் "A Walk Up the Hill: Living with People and Nature" என்ற சுயசரிதையின் தமிழ் மொழிபெயர்ப்பு ஆனது தற்போது சென்னையில் வெளியிடப்பட்டது.
- இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தனுஷ்கோடியில் ஒரு பெரிய ஃபிளமிங்கோ சரணாலயத்தினை தமிழக அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நகரத்தில் நீடித்த மற்றும் நிலையான கழிவு மேலாண்மைக்காக ‘தூய்மை மிஷன்’ எனும் திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்.
- மீன்வள மானியங்கள் தொடர்பான ஒரு ஒப்பந்தத்தினை அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொண்ட உலக வர்த்தக அமைப்பின் (WTO) 101வது உறுப்பினராக நிகரகுவா மாறி உள்ளது.
- ஐரோப்பாவின் மிகப்பெரிய எரிமலையான இத்தாலியின் மவுண்ட் எட்னா சமீபத்தில் வெடித்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஆக்கிரமிப்பு தாவரங்கள் இல்லாத வடுவூர் பறவைகள் சரணாலயம்




- திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆக்கிரமிப்பு தாவரங்கள் / அயல்நாட்டு

ஊடுருவல் தாவரங்கள் இல்லாத வடுவூர் பறவைகள் சரணாலயம் குறித்த சிறப்பு அஞ்சல் உறையினை அஞ்சல் துறை வெளியிட்டுள்ளது.

- வடுவூர் பறவைகள் சரணாலயம் ஆனது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அடையாளம் காணப் பட்டு 2022 ஆம் ஆண்டில் ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டது.
- இந்தச் சரணாலயம் சுமார் 118 பறவை இனங்களுக்கு வாழ்விடமாக அமைகிறது.
- உள்நாட்டு /பூர்வீகத் தாவரங்களை விட அதனுடன் வளத்திற்காக போட்டியிடும் அயல் நாட்டு இனங்கள் சரணாலயத்தில் இருந்து அகற்றப்பட்டு, தற்போது இந்த ராம்சார் தளம் ஆக்கிரமிப்பு தாவரங்கள் இல்லாத பகுதியாக உள்ளது.

## மலை கூத்து

- 'தெருக்கூத்து' கலையின் ஒரு வடிவமான 'மலைக் கூத்து', தர்மபுரி மாவட்டம் மற்றும் திருப்பத்தூரில் உள்ள ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைகளில் உள்ள மலையாளிப் பழங்குடியினரின் வாழ்வில் கலாச்சார ரீதியாக அங்கம் வகிக்கிறது.
- 'கூத்து' என்பது மகாபாரதம் மற்றும் புராணங்களை மையமாகக் கொண்டது.
- இதன் கதையானது திரௌபதியைச் சுற்றியே உள்ளது.
- இதன் தூய்மையான பாணியிலான நிகழ்ச்சிகள் கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகின்றன.
- வடகத்தியப் பாணியிலிருந்து (வடக்கு பாணி) வேறுபட்ட தெற்கத்தியப் பாணி ஆனது காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது.
- இதில் வன்னிய புராணத்தினை இங்கு யார் வேண்டுமானாலும் நிகழ்த்தலாம்; ஆனால் திருவண்ணாமலையில், வன்னியர்களை மட்டுமே கொண்ட குழுக்களே அதை நன்கு நிகழ்த்துகின்றன.




# தேசியச் செய்திகள்


## ஏழை கைதிகளுக்கான ஆதரவு திட்டம்

- ஏழை கைதிகளுக்கு மத்திய அரசு நிதியிலிருந்து நிதி உதவி வழங்குமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை மத்திய அரசு கோரியுள்ளது.
- தங்களது நிதி நிலைமையின் காரணமாக தங்களுக்கு வழங்கப்பட்ட அபராதத்தைச் செலுத்த முடியாததால் சிறைகளில் இருந்து ஜாமீன் அல்லது விடுதலை பெற முடியாத நபர்களுக்கு உதவ இந்த நிதியைப் பயன்படுத்தலாம்.

- மத்திய தலைமை முகமை (CNA) மூலம் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் நிதி வழங்குகிறது.
- இது தேசியக் குற்றப் பதிவு வாரியத்தினால் (NCRB) நிர்வகிக்கப் படுகிறது.
- உள்துறை அமைச்சகம் ஆனது, 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் 'ஏழை கைதிகளுக்கு ஆதரவு வழங்கும் திட்டத்தினை' அறிமுகப்படுத்தியது.
- 2025 ஆம் ஆண்டு இந்திய நீதி அறிக்கையின் படி, சிறைகளில் உள்ள தேசிய சராசரி கைதிகள் இருப்பு விகிதம் 131 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.
- விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கை சிறைகளில் உள்ள மொத்த கைதிகளில் 76 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.




## வாக்காளர் வாக்குப்பதிவு அறிக்கை 2025



**List of 21 New Initiatives by Election Commission of India**

**(Feb 19, 2025-May 29, 2025)**

1. Maximum number of voters at a polling station has been restricted to 1200
2. Additional polling booths will be set up in High Rises / Colonies
3. For Electoral Roll updation, data of Death registration to be directly obtained from RGI database; will be updated after verification
4. Voter Information Slips to be made more elector friendly: serial number and part number of the voter will now be displayed more prominently
5. Provision of mobile deposit facility just outside the polling stations
6. Pan-India All-Party meetings conducted at the CEO/DEO/ERO level. 4,719 meetings held (CEO-40/ DEOs-800/EROs-3879); over 28,000 representatives of political parties participated
7. Election Commission meetings with heads of National & State political parties – AAP/BJP/BSP/CPI(M)/NPP
8. Capacity building programmes for Booth Level Agents of Political Parties at IIIDEM (Bihar, TN & Puducherry)
9. Relaxing the distance norms for canvassing – candidates/political parties now permitted to set up booths beyond 100 meters as opposed to 200 meters
10. Introduction of new Integrated Dashboard - ECINET, with aim to provide all services for all stakeholders at a single point (Single App to replace 40 + Apps/Websites)
11. Duplicate EPIC Number issue resolved; new mechanism for Unique EPIC numbers in place
12. 28 stakeholders were identified in the entire process of preparation of electoral rolls and conduct of elections, including electors, election officials, political parties, candidates and others based on Representation of the People Act 1950, 1951, Registration of Electors Rules 1960, Conduct of Election Rules, 1961 and the instructions issued by the ECI from time to time
13. For each of these stakeholders: training presentations are being prepared based on the Acts, Rules and Instructions of the Commission
14. National Conference of Counsels representing ECI and CEOs organized to strengthen synergy and reorient legal framework
15. BLOs to get Standard Photo ID Card
16. Capacity building programmes at IIIDEM, New Delhi:
    - More than 3500 Booth Level Supervisors already trained at IIIDEM
    - Nearly 6000 BLOs/BLO Supervisors to be trained in the next 45 days in 20 nearly batches
    - Over 1 lakh BLO Supervisors to be trained in next few years
17. Orientation programme for media officers from CEO offices of all 36 States/UTs at IIIDEM conducted
18. Training conducted for Police Officers from Bihar at IIIDEM
19. Implementation of Biometric Attendance
20. Operationalisation and Roll Out of E-Office
21. Regular meetings of ECI with CEOs of all 36 States/UTs and synergizing functioning of their offices with various divisions in ECI.

*****

- பீகாரில் சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் நேரத்தில், ECINET எனும் அதன் புதிய கைபேசிச் செயலியில் தானியங்கி அறிக்கையிடல் அம்சத்தினை அறிமுகப் படுத்துவதாக இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) அறிவித்துள்ளது.

- இந்தப் புதிய செயலி வாக்காளர் வாக்குப் பதிவின் போக்குகள் குறித்து விரைவாகப் பதிவு செய்ய உதவும்.
- தற்போது, ஒவ்வொரு வாக்குச்சாவடியின் தலைமை அதிகாரியும் வாக்காளர் வாக்குப் பதிவு எண்ணிக்கையை ஒரு அரசுத் துறை அதிகாரியிடம் தொலைபேசி மூலமாகவோ அல்லது செய்திகள் மூலமாகவோ இந்தத் தொகுதியின் தேர்தல் அதிகாரியிடம் தெரிவிக்கிறார்.
- இந்தத் தரவுகள் கை முறையாகத் தொகுக்கப்பட்டு, அத்தொகுதிக்கான வாக்குப்பதிவு ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கும் ஒரு முறையில் வாக்காளர் வாக்குப்பதிவு செயலியில் உள்ளிடப்படும்.
- இந்தப் புதிய அமைப்பு ஆனது, ஒவ்வொரு தலைமை அதிகாரியும் ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கும் ஒரு முறையில் ECINET செயலியில் வாக்குப்பதிவு குறித்த புள்ளி விவரங்களை நேரடியாக உள்ளிட வழி வகுக்கும்.
- இந்தச் செயலி மூலம், அத்தொகுதிக்கான வாக்குப்பதிவு தானாகவே கணக்கிடப்பட்டு பொது மக்களுக்குக் காட்டப்படும்.
- 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் கீழ் 49Sவது விதியின் கீழ், தலைமை அதிகாரிகள் (PRO) படிவம் 17C ஆவணத்தினை வழங்க வேண்டும்.

## இந்தியாவின் முதல் அனைத்து மகளிர் முப்படை பயணக் குழு




- முப்படைகளின் அனைத்து மகளிர் கடல் பயணக் குழுவானது சமீபத்தில்நாடு திரும்பி உள்ளது.
- அவர்கள் செஷெல்ஸ் நாட்டிற்கான சுமார் 1,800 கடல் மைல் அளவிலான சர்வதேசப் பயணத்தை நிறைவு செய்துள்ளனர்.
- அவர்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு இந்திய ஆயுதப் படைகள் கப்பலான 'திரிவேணி'யில் இந்தப் பயணத்தினை மேற்கொண்டனர்.
- காலாட்படை, கடற்படை மற்றும் விமானப்படையைச் சேர்ந்த 11 பெண் அதிகாரிகள்

கொண்ட குழு இந்தப் பயணத்தில் பங்கேற்றது.

- இந்தக் குழுவினரில்:
    - இந்திய காலாட்படையின் - லெப்டினன்ட் கர்னல் அனுஜா, மேஜர் கரம்ஜீத், மேஜர் தான்யா, கேப்டன் ஓமிதா, கேப்டன் தௌலி மற்றும் கேப்டன் பிரஜக்தா
    - இந்தியக் கடற்படையின் - லெப்டினன்ட் கமாண்டர் பிரியங்கா
    - இந்திய விமானப்படையின் – வான்படைத் தலைவர் விபா, வான்படைத் தலைவர் ஷ்ரத்தா, வான்படைத் தலைவர் அருவி மற்றும் வான்படைத் தலைவர் வைஷாலி ஆகியோர் அடங்குவர்.

## ஆயுஷ் சுரக்சா இணைய தளம்




- ஆயுஷ் துறை அமைச்சகமானது தவறான கருத்துக்களைத் திணிக்கும் விளம்பரங்கள் மற்றும் மிக பாதகமான மருந்து எதிர்வினைகள் தொடர்பான பல்வேறு சிக்கல்களைத் தீர்ப்பதற்காக ஆயுஷ் சுரக்சா இணைய தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்த இணைய தளமானது, பாரம்பரிய மருத்துவத் துறையில் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை மேற்பார்வையை வலுப்படுத்தும்.
- இந்த இணையதளமானது, தவறான கருத்துக்களை திணிக்கும் விளம்பரங்கள் மற்றும் பாதகமான மருந்து எதிர்வினைகள் குறித்த நிகழ்நேரக் கண்காணிப்பு, முறையானப் பகுப்பாய்வு மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கையை எளிதாக்குகிறது.

## மாநில அரசுப் பள்ளிகளில் சேர்க்கை

- உத்தரகாண்ட், தெலுங்கானா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் உள்ளிட்ட 11க்கும் மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் மாநில அரசுப் பள்ளிகளில் குறைந்த அளவில் மாணவர் சேர்க்கைப் பதிவாகியுள்ளன.
- இந்த வீழ்ச்சியைத் தடுப்பதற்காக மத்திய கல்வி அமைச்சகம் (MoE) ஆனது, "சீராக்கும் நடவடிக்கைகளை" எடுக்குமாறு இந்த 11 மாநிலங்களைக் கோரியுள்ளது.
- தமிழ்நாட்டில், 2023-24 ஆம் ஆண்டில், 64% அரசுப் பள்ளிகளில் 37% மாணவர் சேர்க்கை பதிவாகியுள்ள அதே சூழலில் சுமார் 21% அரசு உதவி பெறாத பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 46% ஆக உள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில், அரசுப் பள்ளிகளில் மொத்த மாணவர் சேர்க்கை 46.33% (40.5 லட்சம்) ஆக உள்ளது, இது அரசு உதவி பெறாத பள்ளிகளில் 52.09% (45.53 லட்சம்) ஆக


இருந்தது.

- கேரளாவில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 46.37 லட்சமாக இருந்தது, என்பதோடு இது 2023-24 ஆம் ஆண்டில் 45.50 லட்சமாகக் குறைந்துள்ளது.




## சர்வதேசச் செய்திகள்

### நைஜீரியாவில் 2025 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம்





- வட மத்திய நைஜர் மாநிலத்தின் மோக்வாவில் கனமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளம் அப்பகுதியில் பேரழிவினை ஏற்படுத்தியுள்ளது.

❖ கடந்த 60 ஆண்டுகளில் இந்த வெள்ளமே மிகவும் மோசமானப் பேரழிவை ஏற்படுத்தி உள்ளதாகக் கருதப்படுகிறது.

❖ 2022 ஆம் ஆண்டில், நைஜீரியாவில் கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட அதன் மோசமான வெள்ளத்திலும் இந்தப் பகுதி பாதிக்கப் பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2024–25




❖ 2024-25 ஆம் ஆண்டில், இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்புநிலை மதிப்பு ஆனது சுமார் 8.2 சதவீதம் அதிகரித்து 76.25 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.

❖ 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப் படி இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்பு நிலை மதிப்பு 70.48 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.

❖ 2024-25 ஆம் ஆண்டில், அதன் வருமானம் 22.77 சதவீதம் அதிகரித்து 3.38 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது என்பதோடு இது 2023-24 ஆம் ஆண்டில் 2.76 லட்சம் கோடி ரூபாய என்ற அளவில் இருந்தது.

❖ இதில் செலவினமானது 7.76 சதவீதம் அதிகரித்து 69,714.02 கோடி ரூபாயாக இருந்தது என்பதோடு இது 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி சுமார் 64,694.33 கோடி ரூபாயாக இருந்தது.

❖ 2024-25 ஆம் ஆண்டில், வெளிநாட்டு மூலங்களிலிருந்துப் பெறப்பட்ட வருவாய் சுமார் 38.07 சதவீதம் அதிகரித்து 2.59 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.

❖ 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப் படி, இந்திய ரிசர்வ் வங்கியின் மொத்தத் தங்க இருப்பு 879.58 மெட்ரிக் டன்களாக இருந்தது.

❖ 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி 2.61 லட்சம் கோடி ரூபாயாக இருந்த இந்திய ரிசர்வ் வங்கியின் 'பிற நிலுவைகள்' ஆனது, 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப் படி 23.31 சதவீதம் அதிகரித்து 3.21 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.

❖ இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 2024-25 ஆம் ஆண்டில் 6.5% ஆக மிதமாக உள்ளது.


❖ நிகர குடும்பச் சேமிப்பு, மொத்தத் தேசியச் செலவின வருமானத்தில் (GNDI) 5.1% ஆக அதிகரித்துள்ளது.

- 2024-25 ஆம் ஆண்டில் டிஜிட்டல்வழி பணம் செலுத்தும் அளவு ரீதியாக 34.8 சதவீதமும், மதிப்பு ரீதியாக 17.9 சதவீதமும் அதிகரித்துள்ளது.
- மத்திய அரசின் மொத்த நிதிப் பற்றாக்குறை (GFD) 2023-24 ஆம் ஆண்டில் 5.5% ஆக இருந்தது என்பதோடு இது 2024-25 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.7% ஆகக் குறைந்தது.
- 200 மற்றும் 500 ரூபாய் தாள்களின் கள்ள நோட்டு மதிப்பு முறையே 13.9% மற்றும் 37.3% அதிகரித்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## 2017 OF201 - புதிய தொலைதூர குறுங்கோள்

- நமது சூரிய மண்டலத்தின் விளிம்பு பகுதியில் புதிய குறுங்கோள் ஒன்று கண்டறியப் பட்டுள்ளது.
- இது சூரியனைச் சுற்றி ஒரு சுற்றுப்பாதையை நிறைவு செய்ய சுமார் 25,000 ஆண்டுகள் எடுக்கிறது.
- இது 2017 OF201 என அழைக்கப்படுகிறது.
- இந்தப் புதிய வானியல் அமைப்பு தோராயமாக 700 கிலோமீட்டர் (430 மைல்) அகலம் கொண்டது.
- இந்த அமைப்பு தற்போது பூமியிலிருந்து நெப்டியூனின் தூரத்தை விட மூன்று மடங்கு தொலைவில் உள்ளது.
- ஒரு குறுங்கோள் என்பது அதன் சொந்த ஈர்ப்பு விசையால் வட்டமான, வரையறுக்கப் படாத சுற்றுப்பாதையில் சூரியனைச் சுற்றி வரும் ஒரு வானியல் அமைப்பாகும்.
- கோள்களைப் போலல்லாமல், குறுங்கோள்களானவை அவற்றின் சுற்றுப்பாதைகளை வரையறுக்காமால், மிகப் பெரும்பாலும் அவற்றைச் சிறுகோள்கள் அல்லது குயிப்பர் மண்டலத்தில் உள்ள பிற பொருட்களுடன் பகிர்ந்து கொள்கின்றன.




## விண்வெளியில் உலகின் முதல் மீத்திறன் கணினி

- சீனா விண்வெளியில் உலகின் முதல் மீத்திறன் கணினி வலையமைப்பை உருவாக்கி வருகிறது என்பதோடு சமீபத்தில் 12 செயற்கை நுண்ணறிவால் இயங்கும் செயற்கைக் கோள்களை இதற்காக இது விண்ணில் ஏவியது.
- இந்த 12 செயற்கைக்கோள்களில், ஒவ்வொன்றும் வினாடிக்கு சுமார் 744 டிரில்லியன்

செயல்பாடுகளை செயலாக்கக் கூடியது என்பதோடு இவை வினாடிக்கு சுமார் 100 ஜிகா பைட்கள் வரையிலான பரிமாற்ற விகிதங்களைக் கொண்டுள்ளன.

- விண்வெளிச் செயலாக்கச் செயற்கைக்கோள் தொகுப்பு ஆனது 'ஸ்டார் கம்ப்யூட்டிங்' திட்டத்தின் கீழான முதல் செயற்கைக்கோள் தொகுப்பு ஆகும்.
- இந்த "மூன்று அமைப்பு கொண்ட செயலாக்கச் செயற்கைக்கோள் தொகுப்பு" ஆனது விண்வெளி அடிப்படையிலான தரவுச் செயலாக்க வலையமைப்பாகச் செயல்படும்.
- இந்த வலையமைப்பு ஆனது பூமியை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு உள் கட்டமைப்பையும் சாராமல், அதன் சுற்றுப் பாதையில் மிகவும் நேரடியாக ஏராளமான தகவல்களைக் கணக்கிடும் திறன் கொண்டது.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில், வரம்பற்ற சூரிய சக்தியைப் பயன்படுத்தப் பெய்ஜிங் "விண்வெளியின் திரீ கார்ஜஸ் அணை" எனும் அமைப்பை கட்டமைக்கும் திட்டங்களை வெளியிட்டது.
- இந்த முன்னெடுப்பானது பூமியிலிருந்து சுமார் 36,000 கிலோமீட்டர் தொலைவில் உள்ள புவிநிலைச் சுற்றுப்பாதையில் ஒரு கிலோமீட்டர் அகலமுள்ள ஒரு பெரிய சூரிய ஒளி ஆற்றல் சார் தொகுப்பினை நிலை நிறுத்துவதை உள்ளடக்கியது.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### இந்தியாவின் சுற்றுச்சூழல் நிலை குறித்த புள்ளிவிவரங்கள் 2025

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) ஆனது வருடாந்திர இந்திய சுற்றுச்சூழல் நிலை குறித்த அறிக்கையை (2025) வெளியிட்டுள்ளது.
- சுற்றுச்சூழல், வேளாண்மை, பொது சுகாதாரம் மற்றும் மனித மேம்பாடு ஆகிய நான்கு கருப்பொருள் பகுதிகளில் 48 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி, இந்த அறிக்கையானது 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை தரவரிசைப்படுத்தியது.
- ஆந்திரப் பிரதேசம், சிக்கிம் மற்றும் கோவா ஆகியவை சில தனிப்பட்டப் பிரிவுகளில் முதலிடத்தில் உள்ளன.
- அனைத்து களங்களிலும் மிகவும் நிலையான செயல்திறன் கொண்ட மாநிலமாக எந்த

மாநிலமும் இடம் பெறவில்லை.

- சுற்றுச்சூழல் மேலாண்மையில் ஆந்திரப் பிரதேசம் முன்னணியில் உள்ளது.
- பொது சுகாதாரம் மற்றும் உள்கட்டமைப்பில் கோவா சிறந்த மாநிலமாக உருவெடுத்து உள்ளது.
- உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை இதன் அனைத்துப் பிரிவுகளிலும் மோசமான தரவரிசையில் உள்ளன.
- இந்தியாவின் பசுமை இல்ல வாயு உமிழ்வானது, 1970 ஆம் ஆண்டிலிருந்து, உலகளவில் 7.8 சதவீதம் என்ற மிக அதிகப் பங்கை எட்டியுள்ளது.




## கேரளாவில் காஸ்பியன் கடற்புறா

- வலசை போகும் அரிய காஸ்பியன் கடற்புறா ஆனது கேரளாவில் முதன்முறையாக தென் பட்டுள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கோழிக்கோட்டில் உள்ள கப்பாட் என்ற கடற்கரையில் தென்பட்டது.
- பொதுவாக மத்திய ஆசியாவில் காணப்படும் காஸ்பியன் கடற்புறா, குளிர்காலத்தில் குஜராத் போன்ற வடமேற்கு இந்தியாவிற்கு வருகை தருகிறது.
- கோவாவில் ஒரு முறை மட்டுமே தென்பட்ட இந்தப் பறவை அதன் பிறகு இது வரை தென்னிந்தியாவில் ஒரு போதும் தென்பட்டதில்லை.




## 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய பனிப்பாறையின் உருகல் நிலை

- தற்போதைய பருவநிலைக் கொள்கைகளின் காரணமாக உலகமானது 2.7°C வெப்பம்


அடைந்தால், உலகின் தற்போதையப் பனிப்பாறைகளில் சுமார் 24% மட்டுமே எஞ்சி இருக்கும்.

- ❖ பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் படி - உலக வெப்பநிலை உயர்வை 1.5°C ஆகக் கட்டுப்படுத்துவதன் மூலம் சுமார் 54% அல்லது இரண்டு மடங்கு பனிப்பாறைகளின் அளவினைப் பாதுகாக்க முடியும்.
- ❖ உலகின் உள்ள பனிப் பாறைகள் 2020 ஆம் ஆண்டு நிலைகளுடன் ஒப்பிடும் போது அவற்றின் அளவில் 39 சதவீதத்தினை இழக்கும் என்பதோடு மேலும் இது கடல் மட்டம் ஆனது 113 மில்லி மீட்டர் உயர வழி வகுக்கும்.
- ❖ ஸ்காண்டிநேவியாவில் உள்ள பனிப் பாறைகள், மேற்கு கனடா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றில் உள்ள ராக்கிஸ் மற்றும் ஐரோப்பிய ஆல்ப்ஸ் ஆகியவை மிகப் பாதிக்கப் படக்கூடிய பகுதிகள் ஆகும்.
- ❖ இந்து குஷ் இமயமலையில், 2020 ஆம் ஆண்டில் இருந்த பனிப்பாறைகள் தற்போதைய நிலையை ஒப்பிடும் போது, 2°C வெப்ப மயமாதலில் சுமார் 25% பனிப்பாறைகள் மட்டுமே எஞ்சி இருக்கும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 'போக்குகள் — செயற்கை நுண்ணறிவு' அறிக்கை





- ❖ மீக்கரின் அறிக்கையின் படி, ChatGPT கைபேசி செயலியின் பயனர்களில் இந்தியா மிக அதிகப் பங்கை (13.5 சதவீதம்) கொண்டுள்ளது.

- இது அமெரிக்கா (8.9 சதவீதம்) மற்றும் ஜெர்மனி (3 சதவீதம்) ஆகியவற்றை விட மிகவும் முன்னணியில் உள்ளது.
- இது DeepSeek எனும் சீன செயற்கை நுண்ணறிவு தளத்தின் மூன்றாவது பெரிய பயனர் நாடாகவும் உள்ளது.
- சீனா இலவச மென்பொருள்/ செயலிகளுக்கான போட்டியில் முன்னணியில் உள்ளது.
- இது DeepSeek-R1, Alibaba's Qwen-32B, மற்றும் Baidu's Ernie 4.5 ஆகிய மூன்று முக்கியமான மாதிரிகளை வெளியிட்டது.

# மாநிலச் செய்திகள்

## சம்ருத்தி மகாமார்கம்

- மகாராஷ்டிராவின் மிக லட்சியமிக்க சாலை உள்கட்டமைப்புத் திட்டமான 701 கிலோ மீட்டர் நீளமுள்ள சம்ருத்தி மகாமார்கம் ஆனது முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தது.
- இது மும்பைக்கும் நாக்பூருக்கும் இடையிலான பயண நேரத்தினை வெறும் ஏழு மணி நேரமாகக் குறைக்கும்.
- மும்பை-நாக்பூர் விரைவுச் சாலை என்று பிரபலமாக அறியப் படுகின்ற இந்த சம்ருத்தி மகாமார்கமானது உண்மையில் மும்பையில் தொடங்குவதில்லை.
- இது பின்வரும் மூன்று வனவிலங்கு சரணாலயங்கள் வழியாக செல்கிறது
  - அகோலாவில் உள்ள கேட்டபூர்ணா வனவிலங்கு சரணாலயம்
  - வாஷிமில் உள்ள கரஞ்சா-சோஹோல் சரணாலயம்
  - தானேயில் உள்ள தான்சா வனவிலங்கு சரணாலயம்





## கட்டம்பூர் அனல் மின் நிலையம்


- NLC இந்தியா நிறுவனமானது, உத்தரப் பிரதேசத்தில் உள்ள அதன் 660 மெகாவாட் திறன் கொண்ட மூன்று அலகு கட்டம்பூர் அனல் மின் நிலையத்தின் முதல் அலகின்

வணிக ரீதியான செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளது.

- இது NLC இந்தியா மற்றும் உத்தரப் பிரதேச ராஜ்ய வித்யுத் உத்பதன் நிகாம் நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுத் துணிகர முதலீட்டு முயற்சியான நெய்வேலி உத்தரப் பிரதேச மின்சார உற்பத்தி லிமிடெட் மூலம் உருவாக்கப்படுகிறது,
- இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் உத்தரப் பிரதேசம் சுமார் 75.12 சதவீதமும் மற்றும் அசாம் 24.88% அளவையும் பெறும்.




## சுண்ணாம்புப் பாறை அடுக்குகள் (ஸ்ட்ரோமாடோலைட்டுகள்) - இமாச்சலப் பிரதேசம்




- சமீபத்தில் இமாச்சலப் பிரதேசத்திலுள்ள சோலன் மாவட்டத்தில் உள்ள சம்பகாட்டின் பைன் மரங்கள் உறைந்த முகடுகளில் பெரிய அளவிலான சுண்ணாம்புப் பாறை அடுக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இது ஆஸ்திரேலியாவில் கண்டறியப்பட்ட 3.6 பில்லியன் ஆண்டுகள் முதல் சமீபத்திய

இமயமலைப் பகுதியில் கண்டறியப்பட்டப் பாறைகளின் காலமான 600 மில்லியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பழமையானதாக இருக்கும்.

- சுண்ணாம்புப் பாறை அடுக்குகள் என்பவை ஆழமற்றக் கடல்களில் உள்ள பண்டைய சயனோபாக்டீரியாவால் கட்டமைக்கப்பட்ட பாறை போன்ற கட்டமைப்புகள் ஆகும்.
- உலகின் பழமையான சுண்ணாம்புப் பாறை அடுக்குகள் 3.6 பில்லியன் ஆண்டுகள் மிகப் பழமையானவை என்பதோடு இவை ஆஸ்திரேலியாவில் காணப்படுகின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## IATA சங்கத்தின் 81வது வருடாந்திரப் பொதுக் கூட்டம்

- சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் (IATA) 81வது வருடாந்திரப் பொதுக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது.
- இந்தியா இந்த நிகழ்வை முன்னதாக, 1958 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் நடத்தியது.
- 1919 ஆம் ஆண்டு உருவான சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்திற்கான மாற்று அமைப்பாக, IATA ஆனது 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கியூபாவின் ஹவானாவில் நிறுவப்பட்டது.
- தற்போது இந்த அமைப்பு உலகளாவிய விமானப் போக்குவரத்தில் சுமார் 82% பங்கைக் கொண்டுள்ள 120+ நாடுகளைச் சேர்ந்த சுமார் 317க்கும் மேற்பட்ட உறுப்பினர் விமான நிறுவனங்களை ஆதரிக்கிறது.




# விளையாட்டுச் செய்திகள்

## ஆசியத் தடகளச் சாம்பியன்ஷிப் போட்டி 2025

- 26வது ஆசியத் தடகளச் சாம்பியன்ஷிப் போட்டியானது கொரியக் குடியரசின் குமி எனுமிடத்தில் நடைபெற்றது.
- இதில் சீன மக்கள் குடியரசு ஆனது, 2025 ஆம் ஆண்டு ஆசியத் தடகளச் சாம்பியன்ஷிப் போட்டியின் பதக்கப் பட்டியலில் 32 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது.


- ❖ இதில் இந்திய விளையாட்டு வீரர்கள் எட்டு தங்கம், 10 வெள்ளிப் பதக்கம் மற்றும் ஆறு வெண்கலம் உட்பட 24 பதக்கங்களை வென்று இப்பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தனர்.


ASIAN ATHLETICS CHAMPIONSHIPS 2025
MEDAL TALLY

| # | NAME | GOLD | SILVER | BRONZE | TOTAL MEDALS |
|---|---|---|---|---|---|
| 1. | CHINA | 19 | 9 | 4 | 32 |
| 2. | INDIA | 8 | 10 | 6 | 24 |
| 3. | JAPAN | 5 | 11 | 12 | 28 |
| 4. | KAZAKHSTAN | 3 | 1 | 2 | 6 |
| 5. | QATAR | 3 | 1 | 2 | 6 |

# இதரச் செய்திகள்

## IDSP பகுப்பாய்வு 2018–2023





- ❖ பெருந்தொற்றின் போக்குகளை நன்கு அடையாளம் காண்பதற்காக ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்டத்தின் (IDSP) கீழ் பதிவான மொத்தம் 6,948 பெருந் தொற்றுகளை ஆராய்ச்சியாளர்கள் பகுப்பாய்வு செய்தனர்.
- ❖ இவற்றில், சுமார் 583 (8.3 சதவீதம்) விலங்கு வழித் தொற்று நோய்கள் ஆகும் என்பதோடு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஆனது விலங்கு வழித் தொற்று நோய்களில் 29.5 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்தன.
- ❖ அதைத் தொடர்ந்து லெப்டோஸ்பிரோசிஸ் (18.7 சதவீதம்) மற்றும் ஸ்க்ரப் டைபஸ் தொற்று (13.9 சதவீதம்) ஆகியவை உள்ளன.
- ❖ பிராந்திய வாரியாக, நாட்டின் வட கிழக்குப் பகுதி விலங்கு வழித் தொற்று நோய்கள் பரவலில் 35.8 சதவீதம் பங்களித்துள்ளது.
- ❖ அதைத் தொடர்ந்து தெற்கு (31.7 சதவீதம்) மற்றும் மேற்குப் பகுதிகள் (15.4 சதவீதம்)

உள்ளன.

- இங்கு ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் விலங்குவழித் தொற்று நோய்கள் தொடர்ந்து உச்சத்தை எட்டியுள்ளன.

## அஹல்யா பாய் ஹோல்கர் - 300வது பிறந்தநாள்

- 1725 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதியன்று பிறந்த அகிலியாபாய் ஹோல்கர், மால்வா இராட்சியத்தின் ஹோல்கர் இராணி ஆவார்.
- அவர் இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை கொண்ட பெண் ஆட்சியாளர்களில் ஒருவராக கருதப்படுகிறார்.
- அவர் 1733 ஆம் ஆண்டு மல்ஹர் ராவ் ஹோல்கரின் மகனான கந்தேராவ் ஹோல்கரை மணந்தார்.
- கந்தேராவ் 1745 ஆம் ஆண்டு கும்ஹர் கோட்டை முற்றுகையின் போது இறந்தார்.
- பின்னர் அஹில்யாபாய் மால்வாவின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு 1767 ஆம் ஆண்டு இந்தூரின் ஆட்சியாளரானார்.
- அவர் குஷாலி ராம், மராத்தியக் கவிஞர் மோரோபந்த் மற்றும் ஷாஹிர் அனந்தபண்டி போன்ற அறிஞர்களை ஆதரித்தார்.
- அவரது மரபினை நன்கு கௌரவிக்கும் வகையில் மகாராஷ்டிரா மாநில அரசானது 'புண்யஷ்லோக் அஹில்யாபாய் ஹோல்கர் சமாரக் ஸ்தல்' என்ற நினைவிடத்தினை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளது.




## ACI மைய விமானப் போக்குவரத்து இணைப்புத் தரவரிசை 2024

- டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் (IGIA) ஆனது, ஆசியா-பசிபிக் மற்றும் மத்திய கிழக்குப் பகுதிகளில் உள்ள முதல் 10 மைய விமான நிலையங்களில் ஒன்றாக உள்ளது.
- துபாய் சர்வதேச விமான நிலையமானது இத்தரவரிசையில் முன்னிலை வகிக்கிறது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து ஷாங்காய் புடாங் சர்வதேச விமான நிலையம் இதில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

❖ இதில் கத்தாரில் உள்ள ஹமாத் சர்வதேச விமான நிலையமும், தென் கொரிய நாட்டின் இன்சியான் சர்வதேச விமான நிலையமும் முறையே மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களைப் பிடித்துள்ளன.

| Top 10 Hub Airports with Connectivity Leadership in 2024 | |
|---|---|
| 1 | Dubai International Airport (DXB) |
| 2 | Shanghai Pudong International Airport (PVG) |
| 3 | Hamad International Airport (DOH) |
| 4 | Incheon International Airport (ICN) |
| 5 | Guangzhou Baiyun International Airport (CAN) |
| 6 | Beijing Capital International Airport (PEK) |
| 7 | Bangkok Suvarnabhumi Airport (BKK) |
| 8 | Singapore Changi Airport (SIN) |
| 9 | Kuala Lumpur International Airport (KUL) |
| 10 | Delhi International Airport (DEL) |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★